Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

தமிழரசு

முரசு 2 7-6-1985 வெள்ளிக்கிழமை (ஜவகாசி 25 நம்மாண்17) முழக்கம்122

அமிர் அவசர வேண்டுகோள் :

ராணுவ கெடுபிடிகளுக்கு அஞ்சி வரும் தமிழரை திருப்பாதீர்!

(சென்னை)

"இலங்கையிலிருந்து இராணுவக் கெடுபிடிகளால் புகலிடம் நாடிவரும் தமிழர்களை இலங்கைக்குத் திரு பி அனுப்ப வேண்டாம்" என்று தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு ஏ. அமிர்தலிங்கம் பிரிட்டிஷ் அரசாங்கத்தைத் தந்தி மூலம் கேட்டுக் கொண்டுள்ளார். "இலங்கையில் நிலைமை சீராகும் வரை அவர்களுக்கு அங்கு தங்குமிட வசதி செய்து கொடுக்குமாறும் அவர் வேண்டியுள்ளார். —4-ஆம் பக்கம் பார்க்க

கொலையுண்டவர் குடும்பத்தவர் சுயதொழிலை ஆரம்பிக்க புனர்வாழ்வு கழக நிதியுதவி திட்டம்

வட பகுதியில் அண்மைக் காலங்களில் இடம்பெற்ற அசம்பாவிதங்களில் கொல்லப்பட்ட குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்கவும், வீடுகள் தீக்கிரையான வசதி குறைந்தவர்களுக்கு புதிய வீடுகளை அமைத்துக் கொடுக்கவும் தமிழ் அகதிகள் புனர் வாழ்வுக் கழகம் புதிய திட்டமொன்றைத் தயாரித்துள்ளது.

இந்தத் திட்டத்தை அமுல் படுத்துவதற்காக கிராமம் கிராமமாக கொலையுண்டவர்கள் பற்றிய விபரங்களைச் சேகரிக்கும் வேலைகள் இப்போது ஆரம்பமாகியுள்ளது.

இது தொடர்பான ஆலோசனைக் கூட்டமொன்று இம் மாதம் 11ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறும். சகல பிரஜைகள் குழுக்களும் தத்தமது பகுதிகளைச் சேர்ந்த விபரங்களை இக் கூட்டத்தில் சமர்பிக்குமெனத் தெரியவந்துள்ளது.

கொலை செய்யப்பட்ட ஒருவரின் குடும்பத்திலிருந்து யாராவது ஒருவர் தெரிவு செய்யப்பட்டு, அவர் ஏதாவது ஒரு சுய தொழிலை ஆரம்பிப்பதற்கு நிதியுதவி வழங்குவது கழகத்தின் முக்கிய திட்டமாகும்.

– 4ஆம் பக்கம் பார்க்க

★ வாகனங்கள் இடைவழியில் நின்றன ★ அரச அதிபரும் அகப்பட்டார்

யாழ்நகரில் நேற்று விற்கப்பட்ட பெற்ரோலில் தண்ணீர் கலப்பு!

மிகுதிப் பெற்ரோலை பரிசோதிக்க உத்தரவு; ஏமாந்தவர்கள் புகார் செய்யவும் வசதி!

யாழ்ப்பாணத்தில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாட்டை நீக்கவென மிகுந்த சிரமத்தின் மத்தியில் விசேஷ ரயில் மூலம் கொண்டு வரப்பட்டு, யாழ்நகரிலுள்ள கூட்டுறவுச் சங்க பெற்ரோல் நிலையமொன்றின் மூலம் நேற்று விற்பனை செய்யப்பட்ட பெற்ரோலில் பெருமளவு தண்ணீர் கலக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இங்கு நேற்று பெற்ரோல் நிரப்பிய பலரது வாகனங்களும் இடைவழியில் ஓடமுடியாது நின்றதைத் தொடர்ந்தே தண்ணீர் கலக்கப்பட்டிருந்தது தெரியவந்தது.

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் உட்பட, யாழ். ஆஸ்பத்திரியின் டாக்டர்கள், மற்றும் பல அத்தியாவசியசேவை அதிகாரிகளின் வாகனங்களும் தண்ணீர் கலந்த பெற்ரோலை நிரப்பியதால் ஓடமுடியாது, இடைவழியில் நின்றவைகளில் சிலவாகும்.

நேற்று முன்தினம்கொண்டு —4ஆம் பக்கம் பார்க்க

ராஜீவ் எச்சரிக்கை!

பாகிஸ்தான் விரைவில் அணுகுண்டு தயாரிக்கும்

(கெய்ரோ)

பாகிஸ்தான் அணுகுண்டை விரைவில் தயாரிப்பதற்கான சகல ஒழுங்குகளையும் செய்து கொண்டிருப்பதாக நேற்று குற்றஞ்சாட்டிய பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி, அப்படியான எந்த எண்ணமும் இந்தியாவிற்குக் கிடைக்காதெனவும் தெரிவித்தார்.

தனது இரண்டுநாள் எகிப்திய விஜயத்தை முடித்துக் கொண்டு அங்கிருந்து புறப்படுவதற்கு முன்னர் பத்திரிகையாளர் மத்தியில் பேசுகை —4ஆம் பக்கம் பார்க்க

திருப்பி அனுப்பப்பட்ட ரவீந்திரனை

பிரிட்டிஷ் அரச செலவில் மீண்டும் அழைக்க முடிவு

(லண்டன்)

பிரிட்டனுக்கு சென்று திருப்பி அனுப்பப்பட்ட இலங்கைத் தமிழரான கந்தையா ரவீந்திரன் என்பவரை மீண்டும் பிரிட்டனுக்கு அரச செலவில் அங்கு அழைப்பதற்கு அந்நாட்டு உள்துறை அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இவர் பிரிட்டன் போய்ச் சேர்ந்ததும், விசாரணைகள் பூர்த்தியாகாமல் திருப்பி அனுப்பப்பட்டதாகஉள்துறை அமைச்சுசெயலாளர் லிபோன் பிரிட்டன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இவரை பிரிட்டனுக்கு பிரிட்டிஷ் அரசின் செலவில் —4-ஆம் பக்கம் பார்க்க

34 பேர் விபரம் கிடைத்தது

நெடுந்தீவு படகுத்தாக்குதல் சம்பவத்தில் மரணமான 34 பேர் பற்றிய பூரண தகவலும் யாழ்ப்பாணம் செயலகத்துக்கு இப்போது கிடைத்துள்ளது. இவர்களது மரணச் —4ஆம் பக்கம் பார்க்க

திருமலையில் கமாண்டோ படையினர் சென்ற

ஹெலிக்கப்டருக்கு துப்பாகிச் சூடு; முதூரில் மரணமானோர் 80 பேர்!

(திருமலை)

விமானப்படைக்குச் சொந்தமான ஹெலிகப்டரொன்றின் மீது தீவிரவாதிகளால் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்று பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையிலிருந்து நினாவெளிப் பகுதிக்கு கமாண்டோ படையினரை ஏற்றிச் சென்ற போது இந்தச் சூடுச் சம்பவம் இடம்பெற்றதாகவும், ஹெலிகப்டருக்குச் சிறிது சேதம் மட்டுமே ஏற்பட்டதாகவும் அரசாங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தின் பின் ஐந்து தீவிரவாதிகள்கொல்லப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே மூதூரில் நேற்றுமுன்தினம்இடம்பெற்ற தாக்குதல்களினால்கமார் என்பது பேர் மரணமானதாக பிந்திக் கிடைத்த தகவல்கள் தெரி —4ஆம் பக்கம் பார்க்க

ஊர்காவற்றுறை முற்றுகையிடப்பட்டது; நான்கு மணிநேரம் சோதனை

(ஊர்காவற்றுறை)

காரைநகர் கடற்படை முகாம் பகுதியில் இருந்து பல படகுகளில் வந்த பலவித சீருடையினரால் நேற்றுக் காலை ஒன்பது மணி தொடக்கம் பிற்பகல் ஒருமணி வரை தொடர்ந்து நான்கு மணித்தியாலம் ஊர்காவற்றுறைப் பகுதி முற்றுகையிடப்பட்டு சோதனையிடப்பட்டது.

குறிப்பிட்ட சீருடையினர் கரை வந்து இறங்கியதும் கடைகள் இழுத்து மூடப்பட்டன. மக்கள் நாலா புறமும் சிதறி பாதுகாப்புள்ள இடங்களுக்கு ஓடினார்கள்.

வீடுகள், ஒழுங்கைகள், அடர்த்தியான மரங்கள், பள்ளமான இடங்கள் அனைத்தும் சல்லடை போட்டுத் தேடப்பட்டது. ஆட்கள் இல்லாத வீடுகளின் பூட்டுக்கள் உடைக் —4ஆம் பக்கம் பார்க்க

யாழ். கொழும்பு பாதையில் தனியார் மினிபஸ்கள்சேவை

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையிலான பஸ் போக்குவரத்துச் சேவையை வழக்கமாக நடத்திவரும் பிரபல பஸ் நிறுவனங்கள் கடந்த இரு தினங்களாக நடத்தவில்லையாயினும், சில மினிபஸ்கள் தொடர்ந்தும் சேவையிலீடுபட்டு வருகின்றன.

நேற்று முன்தினமும், நேற்றும் மினிபஸ்கள் பிரயாணிகளுடன் கொழும்புக்குச் சென்றன. நேற்று முன்தினம் காலை இங்கிருந்து புறப்பட்ட மினிபஸ் ஒன்று, நேற்று அதிகாலை நான்கு மணிக்கு கொழும்பு சென்றடைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து நேற்றுக் காலை பிரபல நிறுவனமொன்றின் பஸ் யாழ்ப்பாணத்துக் —4ஆம் பக்கம் பார்க்க

கந்தளாய் சம்பவத்தில்!

கந்தளாய் பகுதியில் நேற்று நடைபெற்ற அசம்பாவிதமொன்று பற்றி தெரியவந்துள்ளது. இச் சம்பவத்தில் சுமார் முப்பது பேருக்குமேல் மரணமானதாக ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

பாரதப் பிரதமரின் நம்பிக்கை

ஜனாதிபதி ஜெயவர்த்தனவுடன நாம் நடாத்திய பேச்சுவார்த்தைகளில் இலங்கையின் இனப்பிரச்சினையை தீர்க்க நல்ல சாத்தியக்கூறு இருப்பதாக இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி நேற்று செய்ரோவில் இந்திய பிரஜைகள் மத்தியில் பேசுகையில் கூறினார்.

மல்லாகம் விழிப்புக் குழு

மல்லாகம் சன்மார்க்க சன சமூக நிலைய நிர்வாக சபையின் கீழ் உருவாக்கப்பட்ட விழிப்புக்குழு கசிப்பு ஒழிப்பில் ஈடுபட்டு வெற்றி கண்டுள்ளது.

தற்பொழுது இக்குழு சமூக நல சமாதான சபையாக புனரமைக்கப்பட்டு மக்கள் மத்தியில் ஏற்பட்டுவரும் பிரச்சினைகளை சமாதானமாகத் தீர்த்து வருகின்றது. சென்ற மாதம் 14ம் திகதி இச்சபையின் எழுச்சி விழாவும் கொண்டாடப்பட்டது. மகளிர் பேரவை ஒன்றும் இச்சபைக்குத்துணையாகத் தெரிவு செய்யப்பட்டது.

இச்சபையின் நிர்வாகிகள் விபரம் வருமாறு, தலைவர்: பெ. ரஞ்சன் செயலாளர்: மு. நவயோகராஜா; பொருளாளர்: பெ. நவரட்ணலிங்கம்; செயற்குழுபிரதட உறுப்பினர் ஐ. தம்பிமுத்து.

நிர்வாகிகள்

(கொடிகாமம்)

கொடிகாமத்தில் தலைமைக் காரியாலயத்தைக் கொண்ட தென்மராட்சி கிழக்கு தெற்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக்கூட்டுறவுச்சங்கவருடாந்த பொதுக் கூட்டம் சங்கத் தலைவர் திரு. க கதிரன் தலைமையில் நாவற்காடு அ. மி தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெற்றது.

பின்வருவோர் செயற்குழு உறுப்பினர்களாக ஏக மனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்:-

திரு: க. கதிரன், திரு. பொ. மாணிக்கம், திரு. வெ. மகேஸ்வரன், திரு. சி, கந்தையா, திரு. க. நாகேந்திரம் திரு, க, கந்தசாமி, திரு மு. கதிரவேல், திரு. க, கணபதி, திரு. மா, ஞானசேகரம்,

புதிய யாப்பின்படி உறுப்பினர்களில் ஒருவரை தலைவராக செயற்குழு தெரிவு செய்யும்.

பிள்ளைகளை திருத்தி வளர்க்க வேண்டும்

''சர்வதேச இளைஞர் ஆண்டில் இளைஞரின் நல்லொழுக்க விருத்தியில் அனைவரும் அக்கறை காட்ட வேண்டியது விசேட அம்சமாகும். பெற்றோர்கள் ஆசிரியர்கள் பிள்ளைகளை நல்லொழுக்கமும் இறைபக்தியும் உள்ளவர்களாக வளர்க்க வேண்டும். தவறான வழிகளில் செல்லும் பிள்ளைகளைத் திருத்தாவிடின் பிரதிபலனை துன்பத்துடன் அனுபவிக்க வேண்டிய நிலை எமக்கு ஏற்படும்'' என்று சர்வதேச இளைஞர் ஆண்டை முன்னிட்டு நடைபெற்ற விசேட கூட்டத்தில் வல்ஞர்பண்ணை இளைய தம்பி வித்தியாலய அதிபர் திரு. கா. கணேசதாசன் கூறினார். இளைஞர் ஆண்டுப்பாடசாலைக் குழு செயலாளர் திருமதி. பொ. சதாசிவம் ''சோர்வுற்றவர்களுக்கு உதவுதல்'' என்னும் விடயமாக விசேடசொற்பொழிவாற்றினார் ஞாயிறு தோறும் இலவச சமயபாட வகுப்பு நடாத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

விழிப்புலனற்றோர் சங்க நிர்வாகிகள்

அகில இலங்கை வாழ் தமிழ் பேசும் கண்பார்வை அற்றவர்களின் நலன்களைக் கவனித்தற் பொருட்டு கடந்த பல ஆண்டுகளாக இயங்கி வரும் ஒரே ஒரு ஸ்தாபன அமைப்பான யாழ். விழிப்புலன் அற்றோர் சங்கம் தனது ஒன்பதாவது ஆண்டு நிறைவைக் சுடந்த மாதம் இருபத்தைந்தாம் திகதி நவீல்ட் பாடசாலை மண்டபத்தில் கொண்டாடியது.

கலை நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கான நிர்வாகக் குழுவும் தெரியப்பட்டது. கா. விஜயராஜசிங்கம் மீண்டும் தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். செயலாளராக ஆ. ரவீந்திரனும், பொருளாளராக செல்வி வை. ஜோதீஸ்வரியும், இதழாசிரியராக மு. பாலசுப்பிரமணியமும் தெரிவாகினர். செயற்குழுவும் பொதுச் சபையால் தெரியப்பட்டது.

மக்கள் பயன் பெறுவர்

(இருபாலை)

கோப்பாய் உப-அலுவலகத்தின் பன்முகப் படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்திலிருந்து ஒதுக்கப்பட்ட நிதியில் நான்கு இலட்சம் ரூபா பெறுமதியுள்ள அதி சக்தி மிக்க புதிய டிரான்ஸ்போமர் ஒன்று கட்டைப்பிராய் வட்டக்குளத்திற்கருகாமையில் பொருத்தப்படவுள்ளது.

இதன் மூலம் மின்சாரம் பெறுவதற்கென ஏற்கனவே விண்ணப்பித்திருக்கும் இருபாலைப் பகுதி மக்கள் பெரிதும் பயனடையக் கூடியதாய் இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

✻ சண்டிலிப்பாய் மத்தி, குமாரவேலு மங்களேஸ்வரி தம்பதிகளின் மகள் குகப்பிரியா இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✻ யாழ். மணிக்கூட்டு வீதி, சிவகப்பிரமணியம் ஜெயமலர் தம்பதிகளின் மகன் சுதர்சன் இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

✻ பாஷையூர், அலோசியஸ் செபமாலை தம்பதிகளின் மகள் சகாயதேவி இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

✻ புதுக்குடியிருப்பு, அருமை நாயகம் அல்பொன்சா தம்பதிகளின் மகன் யசோதரன் இன்று தனது மூன்றாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

✻ நீர்வேலி தெற்கு, கந்தசாமி கோவிலடி, சிவகுமாரன் தனலட்சுமி தம்பதிகளின் மகன் ஜெனனி இன்று தனது மூன்றாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

✻ யாழ்ப்பாணம், துரைராஜா தனலட்சுமி தம்பதிகளின் மகன் யுலக்ஷனா இன்று தனது மூன்றாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

✻ பாஷையூர், மரியதாஸ் புஷ்பராணி தம்பதிகளின் மகன் உதயதாஸ் இன்று தனது ஏழாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✻ கொக்குவில் நந்தாவில், யோகேந்திரநாதன் செல்லகுமாரி தம்பதிகளின் மகள் வான்மதி இன்று தனது பத்தாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

✻ மானிப்பாய் தெற்கைச் சேர்ந்த ஜெகநாதன் ராணி தம்பதிகளின் புதல்வி சங்கீதா தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✻ ஈச்சமோட்டை, தட்சணாமூர்த்தி பீரிஸ் தம்பதிகளின் மகள் வில்லி விக்ரோரியா இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✻ புத்தூர், தியாகராஜன் புளோறன்ஸ் தம்பதிகளின் மகள் யூடிற்றா கயனி இன்று தனது ஐந்தாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

மீண்டும் துரிதம்

(சுண்டுக்குளி)

யாழ் செயலகத்தில் பிறப்புச் சான்றிதழ்கள் வழங்கும் வேலைகள் மிகவும் துரிதமடைந்துள்ளன. பல மாதங்களாக முடங்கிக் கிடந்த பிறப்புச் சான்றிதழுக்கான விண்ணப்பப் படிவங்கள் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டுக் கூடிய விரைவில் விண்ணப்பதாரர்களுக்குப் பிறப்புச் சாட்சிப் பத்திரங்களை அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஊர்காவற்றுறை நான்கு கல்வி வலயமாக பிரிகின்றது

(புங்குடுதீவு)

ஊர்காவற்றுறைத் தொகுதியில் உள்ள பாடசாலைகள் அனைத்தும் அடுத்த ஆண்டு முதல் நான்கு கல்வி வலயங்களாகப் பிரிக்கப்படவுள்ளன. புங்குடுதீவு கல்வி வட்டாரத்தில் இருகல்வி வலயங்களும் வேலணை கல்வி வட்டாரத்தில் இருகல்வி வலயங்களும் அமையவுள்ளன.

இவ்வலயங்களின் அமைப்புத் தொடர்பான ஆலோசனைக் கூட்டமொன்று இம்மாதம் 13ம் திகதி காலை 9 மணிக்கு வேலணை சேர் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயத்தில் நிகழவிருக்கிறது. யாழ். கல்வியதிகாரி திரு. க. கந்தசாமி இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளார்.

நொதேண் A/L 87

கலை, வர்த்தக வகுப்புகள்
ஆரம்பம் 10-06-85 4மணி

விஞ்ஞான வகுப்புகள்
ஆரம்பம் 10-06-85 3மணி

Pure/App கணித சிறப்புப்பட்டதாரி ஆசிரியரால் கற்பிக்கப்படும்

உடன் தொடர்பு கொள்ளவும்

கிளை:

பிரதான வீதி சுண்டிக்குளி

நல்லூர் தெற்கு சனசமூக நிலையம்

JAFFNA COLLEGE TECHNICAL INSTITUTE

VACANCIES

Dyn. Ads

The undermentioned vacancies exist in our teaching staff. Suitable candidates should make their applications ON FORMS AVAILABLE AT OUR OFFICE to reach the DIRECTOR, JAFFNA COLLEGE TECHNICAL INSTITUTE, VADDUKODDAI, before 15th June, 1985.

Successful candidates, who will be selected after an interview, will be expected to commence work by 1st July, 1985.

VISITING LECTURERS

(a) BUILDING CONSTRUCTION TECHNOLOGY

(b) QUANTITY SURVEYING and DRAUGHTSMANSHIP

Candidates should possess a recognised Degree or Diploma in a related field. Practical experience of 3 years or more will be a definite advantage.

Remuneration: Rs. 50/- per hour (8—10 hours per week)

INSTRUCTORS

(a) ELECTRONICS ENGINEERING
(b) COMPUTER PROGRAMMING
(c) ENGINEERING DRAWING

Candidates should have N D T or equivalent qualifications, preferably with practical experience of 2 years or more.

Salary: Rs. 1000/- — Rs, 1300/- per month (all inclusive)

வரி விளம்பரம்

விற்பனைக்கு

மின்சாரத்தில் இயங்கும் தச்சுத் தொழில் இயந்திரம் விற்பனைக்குண்டு. சகல விபரங்களுக்கும் கீழ்க்காணும் இரு முகவரியிலும் தொடர்பு கொள்ளலாம். 1. ஆ. வேலும் மயிலும், சடையாளி, காரை நகர். 2. சித்தப்பாகடை, 231, திருநகர். கிளிநொச்சி.

தவறிவிட்டது
DRAWING PEN

இருமுனை வரைதல் பேனா யாழ். மின்சார நிலையத்திற்கு முன்பாக தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சமுரசு காரியாலயத்துடன் தொடர்பு கொள்க. சன்மானம் வழங்கப்படும்.

COLOMBO/BERLIN

உடனடியாகச் செல்ல விரும்புவோர்

தாமதமின்றித் தொடர்பு கொள்ளுங்கள்

யாழ்ப்பாணத்திலிருந்தே பயணத்திற்கான சகல ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

பணத்தை கொழும்புக்கு எடுத்துச் செல்ல வேண்டிய தேவை உங்களுக்கிராது. யாழ்ப்பாணத்திலேயே ஒழுங்குகளெல்லாம் பூர்த்தியாகும்.

கட்டுநாயக்கா விமான நிலையம்வரை பல்வேறு வசதிகளையும், உதவிகளையும் நாம் செய்து தருவோம்.

குறைந்த கட்டணங்கள், துரிதமான ஒழுங்குகள் நம்பிக்கை வாய்ந்த சேவை:

இவற்றுக்கு பிரசித்திபெற்ற பெயர்

MACK TRAVELS LTD.

இல. 8, முதலாவது ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24791

உதய சிந்தனை

பெரும்பான்மையோர் சிறுபான்மையோருடன் நல்லெண்ணத்துடன் பழகி அவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாய் வாழ வேண்டும்.

-- மகாத்மாகாந்தி

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

இதயஒலி

7-6-1985 வெள்ளிக்கிழமை (குரோதன வைகாசி 25)

மனித கொலைகளை நிறுத்த நடவடிக்கை எடுங்கள்

தமிழ் மக்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வரும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அண்மைக் காலங்களாக நடைபெற்று வரும் கொலைகளும், தீவைப்புகளும், வெளியேற்றப்படுதலும் இப்பகுதிகளில் வாழ்ந்துவரும் சகல மக்களையும் எதிர்காலம் பற்றி அச்சம் கொள்ளச் செய்து வருகின்றன.

வெறுமனே திடீர் கோபத்தால் ஏற்பட்ட தாக்குதல்கள் என்றோ, பிரச்சினையை ஏற்படுத்த சில விஷமிகளால் மேற்கொள்ளப்படும் அநாகரிக, மனிதப் பண்பாடற்ற செயல்கள் என்றோ இச்சம்பவங்களைக் கருத முடியாதிருக்கின்றது.

மிகவும் வல்லமை பொருந்திய, சகலதையும் சாதிக்கக் கூடிய சக்திபடைத்த மூன்றாவது கோஷ்டியொன்று, பின்னணியில் நின்று திட்டமிட்டுச் செயற்படுவதாக மக்கள் எண்ண வேண்டியிருப்பது தவிர்க்க முடியாததாகியுள்ளது.

மன்னார் பகுதியில் சில மாதங்களுக்கு முன்னர் இவ்வாறு ஆரம்பமான கொலை, கொள்ளை, தாக்குதல், தீ வைப்புச் சம்பவங்கள் ஆண்டாண்டு காலமாக அங்கு வாழ்ந்து வந்த மக்களைக் குடிபெயரச் செய்ததை எவரும் மறந்துவிட முடியாது.

இதனால் ஆயிரக் கணக்கானோர் அகதிகளாக தமிழ் நாட்டில் தஞ்சம் புகும் நிலை ஏற்பட்டது.

தமிழ்ப் பிரதேசங்களின் கரையோரப் பகுதிகளில் அடிக்கடி இவ்வாறு நடைபெற்ற கோரச் செயல்களால், மக்கள் குடும்பம் குடும்பமாக வீடு வாசல்களை விட்டு வெளியேறினர். நிர்க்கதியான பலரும் இன்றும் அகதிகளாகவே வாழ்ந்து வருகின்றனர்.

இதனைத் தொடர்ந்து பல்வேறு தமிழ்ப் பகுதிகளில் ஆரம்பமான இனப் படுகொலை இன்று தலைவிரித்துத் தாண்டவமாடுகின்றது.

ஆண், பெண் என்ற வித்தியாசமின்றி, சிறு குழந்தை, வயோதிபர் என்ற வேறுபாடின்றி அனைவருமே சுடும், வெட்டியும், குத்தியும் கொலை செய்யப்படுமளவிற்கு நிலைமை மோசமடைந்து வருகின்றது.

எத்தனை மகஜர்கள், தந்திகள், கடிதங்களை யாருக்கு அனுப்பியும் கூட, எந்தப் பிரயோசனமுமே இல்லாது போய் விடுகிறது.

வல்வெட்டித்துறையிலும், கரவெட்டியிலும் கட்டடத்துடன் சேர்த்து குண்டு வைத்துக் கொல்லப்பட்டவர்கள் எத்தனை பேர்? பெயர், வயது விபரங்களுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்கப்படும் நடவடிக்கை 'பூஜ்யம்' தான்!

அரச தரப்பில் பாதுகாப்புப் படைகள் சிறு தவறு விட்டால் அதனைப் பெரிதுபடுத்தி பிரசாரம் செய்யும் வெளிநாட்டு வெகுஜன தொடர்புச் சாதனங்கள், தீவிரவாதிகளின் மனிதாபிமானமற்ற செயல்களுக்கு மௌனம் சாதிக்கின்றனவென்று அமைச்சர் அத்துலத்முதலி ரூபவாஹினி பேட்டியொன்றில் குறைபட்டுள்ளார்.

இலங்கையின் அரச வெகுஜன தொடர்புச் சாதனங்கள் எவ்வாறு நடந்து கொள்கின்றன?

வல்வெட்டித்துறையில் தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டதற்கு இவை மௌனம் சாதிக்கவில்லையா?

நெடுந்தீவுப் படகில் பயணம் செய்த அப்பாவி மக்கள் நடுக்கடலில் வைத்துக் கொலை செய்யப்பட்டமைக்கு இவை மௌனம் சாதிக்கவில்லையா?

அனுராதபுரத்தில் எத்தனை தமிழ் மக்கள் கொலை செய்யப்பட்டனர். இங்கு தீவிரவாதிகளால் கொல்லப்பட்ட சிங்கள மக்களின் புள்ளி விபரங்களைத் தந்தனர்களால், அதே சம்பவங்களின் தொடர்ச்சியாக கொல்லப்பட்ட தமிழர்களின் புள்ளி விபரங்களைத் தர முடியவில்லையே!

மூதூர் தொகுதியில் கடந்த இரு வாரங்களாக என்ன நடைபெறுகின்றது? இங்குள்ள இரு கிராமங்களில் ஐந்து அப்பாவிச் சிங்களவர்கள் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது போல, எத்தனை தமிழர்கள் கொல்லப்பட்டனர் என்று ஏன் கூற முடியவில்லை?

கடந்த செவ்வாய்க்கிழமை மூதூரில் எத்தனை பேர் கொல்லப்பட்டனர்? எத்தனை வீடுகள் எரிகக்ப்பட்டன? எத்தனை பேர் அகதிகளாக்கப்பட்டுள்ளனர்?

அமைச்சர் தொண்டமான் இதுபற்றி அரசுக்கு முறையிட்டார் அல்லவா?

இவைபற்றி அரச வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் எதனையும் தெரிவிக்காது மௌனம் சாதிப்பது ஏன்?

தமிழ் உயிர் பெறுமதியற்றது என்பதாலா?

பாரதத்துடன் சேர்ந்து சகல வன் செயல்களையும் நிறுத்த இலங்கை அரசு தீர்மானித்துள்ளதை மனப்பூர்வமாக வரவேற்கும் நாம், அதற்கு முன்னர். அப்பாவி மக்களை தினம் தினம் கொன்று குவிப்பவர்களைக் கண்டுபிடித்து அதனைத் தடுப்பதற்கும் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென மிகவும் விநயத்துடன் வேண்டுகோள் விடுக்க விரும்புகின்றோம்.

வளைகுடா சமரஸம் : பாரதம் எகிப்து இணைந்து முயற்சி!

(செய்ரோ)

சர்வதேச ரீதியில் பலத்த தாக்கத்தை உண்டு பண்ணியுள்ள வளைகுடாப்போரில் சுமுகநிலை ஒன்றினைத் தோற்றுவிக்கும் நோக்குடன் ஈரான், ஈராக் தலைவர்களுடன் சமரஸமுடன் முயற்சிகளில் ஈடுபடுவதென பாரதப் பிரதம மந்திரி திரு ராஜீவ் காந்தியும் எகிப்திய ஜனாதிபதி முபாரக்கும் திடசங்கற்பம் பூண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. மேற்படி நாடுகளுடன் இது விடயத்தில் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும் அவர்கள் திட்டம் வகுத்துள்ளனர் பிரதம மந்திரி திரு ராஜீவ் காந்தியின் எகிப்திய விஜயத்தின் மூலம் இந்நிலைப்பாடு தோற்றுவிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி முபாரக்குடன் திரு. காந்தி இருதரப்பு உறவு மற்றும் சர்வதேச நிலைமை குறித்தும் விரிவாக விவாதித்தார்.

"பகைமையை வளராது தடுப்பதே எமது நோக்கம்" என இருதலைவர்களும் தெரிவித்தனர். விண்வெளியிலும் ஆயுதபாவனை என்ற நிலை வலுவடைவது குறித்து அவர்கள் கவலை வெளியிட்டனர்,

போர் நிலை தவிர்க்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. இவைவெறி குறித்து அணிசேரா நாடுகள் இயக்கம் கடும் கண்டனம் தெரிவித்தே தீரும் என்று அவ்வியக்கத்தின் தலைவர் என்ற வகையில் திரு காந்தி உறுதியுடன் தெரிவித்தார்.

தென்னாபிரிக்காவிலும் நமீபியாவிலும் நிலவும் நிலைகுறித்து பரிசீலிக்கப்பட்டது.

பாலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கான தமது ஆதரவை வெளிப்படுத்திய திரு காந்தி அரபுமக்களின் நியாயமான இயட்சியங்களை பாரதம் மதித்து வந்துள்ளது என்று குறிப்பிட்டார். அக்னைஇந்திராவின் ஆசீர்வாதத்துடன் இந்நிலைப்பாடு தொடர்ந்தும் நிலைநிறுத்தப்படும் என்றும் அவர் சொன்னார்.

குஜராத்தில் குண்டர் கைது

(குஜராத்)

குஜராத்தில் அரசு ஊழியர்கள் காலவரையற்ற வேலை நிறுத்தம் மேற்கொள்ள முஸ்தீபு நடத்தியதைத் தொடர்ந்து அரசு அத்தியாவசிய சேவைகள் சட்டத்தைப் பிரகடனப் படுத்தியுள்ளது.

இதற்கமைய சிறைத் தண்டனை அல்லது அபராதம் விதிக்க வழிகிடைக்கிறது.

குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் எழுபத்து இரண்டு பேரும் தேசிய பந்தோபஸ்துச் சட்டத்தின் கீழ் முப்பத்து இரண்டு பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஜே. ஆர். சந்திப்பு குறித்து ராஜீவ்

சுமுகத் தீர்வுக்கு உகந்த சூழ்நிலை உருவாக உதவியது

(சென்னை)

இலங்கையில் நிலவும் நிலைபரத்தின் கடுமையைத் தணிக்கவும் பிரச்சினைக்கு சுமுகத் தீர்வு காணக்கூடியதற்குகந்த சூழ் நிலையை உருவாக்கவும் கூடியதாகத் தாம் இலங்கை ஜனாதிபதியுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் அமைந்திருந்ததாகப் பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தி தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம் ஜி. இராமச்சந்திரனுக்கு தொலைபேசிமூலம் தெரிவித்த தகவலில் கூறியதாக நேற்று சென்னையில் தமிழ்நாடு அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

தானும் இலங்கை ஜனாதிபதியும் இருவரோடு ஒருவர் நெருங்கிய தொடர்பு கொள்வதற்கு முடிவு செய்திருப்பதாகவும் திரு. காந்தி தெரிவித்ததாகவும் மேற்படி வட்டாரங்கள் தகவல் தந்தன.

அனல் காற்று 103 பேர் மடிவு

(பீகார்)

பீகாரில் கொளுத்தும் கோர வெயிலின் கொடூரம் தாங்காமல் இதுவரை நூற்றுமூன்று பேர் இறந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அனல் காற்றால் இருக்கு நான்கு மணித்தியாலங்களுக்குள் நூற்றுக்கு மூன்று பேரின் ஜீவன் பிரிந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஐ. நா. உறுப்பினர் யோசனை: லெபனான் அதிபர் பெறுவார்

(பெய்ரூட்)

லெபனானின் தென்பகுதியிலிருந்து இஸ்ரேலியத் துருப்புகள் முழுமையாக விலகிக் கொண்டபின் அங்குள்ள ஐக்கிய நாடுகள் சபையின் ஐந்து நிரந்தர உறுப்பினர்களினதும் ஆலோசனை பெற ஜனாதிபதி ஜமாயல் எண்ணம் கொண்டுள்ளதாக நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி எதிர்கால நடவடிக்கைகளின் போது சேவியத் யூனியன், அமெரிக்கா, பிரிட்டன், சீனா, பிரான்ஸ் முதலான நாடுகளினது உதவியைப் பெறவும் முனைவார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஜெனீவாவில் ஆரம்பமாகின்றன

ஆப்கான் - பாகிஸ்தான் சமாதான முயற்சிகள்

(லண்டன்)

ஆப்கானிஸ்தான் – பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையிலான பிரச்சினையில் புதிய சுற்றுப் பேச்சுவார்த்தைகள் இம்மாதப் பிற்பகுதியில் ஜெனீவாவில் ஆரம்பமாகவுள்ளன.

பெரும்பாலும் இப்பேச்சுவார்த்தைகள் இம்மாதம் பத்தொன்பதாம் திகதி அல்லது இருபதாம் திகதி தொடங்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் தீவிர முயற்சியால் பலபல ஆண்டுகளாகவே இப்பேச்சுவார்த்தைகள் நடைபெறும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

ஷியா உறுதி

(கராச்சி)

பாகிஸ்தானில் உள்ள ஐந்து இலட்சம் பங்களாதேஷ் நாட்டவர் நாடு திரும்ப வசதி செய்து கொடுக்கப்படுமென பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் ஷியாவுல் ஹக் தெரிவித்துள்ளார்.

தெஹ்ரான் மீது ஈராக்கிய போர் விமானத் தாக்குதல்

(பாக்தாத்)

ஈராக்கிய போர் விமானங்கள் ஈரான் தலைநகரான தெஹ்ரான் மீது அதிகாலை வேளை இருதடவைகள் குண்டுத் தாக்குதல்கள் நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதல்களை நடத்திய பின் தம் விமானங்கள்பவுத்திரமாகத் தளங்களுக்குத் திரும்பி விட்டதாக ஈராக்கிய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஈரான் போர் நிறுத்தத்திற்கு உடன்படும்வரை தமது தாக்குதல்கள் தொடர்ந்து நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

பிரம்ம புத்திரா பெருக்கெடுப்பு

(அஸாம்)

அஸாமில் வெள்ள நிலைமை மிகக் கடுமையாகி வருவதாக நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

பிரம்ம புத்திரா நதி பெருக்கெடுத்துப் பாய்வதாகவும், ரயில், சாலை சேவைகள் தொடர்ந்து பாதிப்புற்றுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

விமானத் தாக்குதல்

(லண்டன்)

ஆப்கானிஸ்தான் மிக் விமானம் ஒன்று பாகிஸ்தான் எல்லைப்பகுதியில் திடீரெனக் குண்டு வீச்சு நடாத்தியதால் பன்னிரண்டு பேர் கொல்லப்பட்டனர் என அறிவிக்கப்பட்டுள்ளது முப்பத்திரண்டு பேர் காயமடைந்ததாகவும், இக் குண்டு வீச்சு ஒரு வயல் பிரதேசத்தில் நடந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தடையுத்தரவு

(மதுரை)

திருப்பரங்குன்றத்தில் செவ்வாய்க்கிழமை முதல் பதினைந்து நாட்களுக்கு அவசரகால சட்ட விதிகளின்கீழ் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஜல்லிக்கட்டுக் காளை நிகழ்ச்சி ஒன்று நடத்தப்படுவது குறித்து இருசாராருக்கிடையே உண்டான கருத்து வேறுபாட்டால் உருவான பதற்றமே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஈழமுரசு

மக்கள் வங்கிக் கிளையில் நுளம்பு வலைகள் கொள்ளை!

யாழ்: ஸ்ரான்லி வீதியிலுள்ள மக்கள் வங்கிக் கிளையில் இருந்து சுமார் இருபது 'நுளம்பு வலைகள்' ஆயுதங்களுடன் வந்த இளைஞர்களால் நேற்றுக்காலை கொள்ளையடித்துச் செல்லப்பட்டது. வங்கி ஊழியர்களுக்கும், அலுவலர்களுக்கும் கடன் அடிப்படையில் கொடுப்பதற்காகவே இவை கொண்டுவரப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. வான் ஒன்றில் வந்த இளைஞர் குழு ஒன்றே இக்கொள்ளையை மேற்கொண்டதாகவும், கொள்ளை போன நுளம்பு வலைகளின் பெறுமதி சுமார் ஆறுயிரம் ரூபா எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து மழை பெய்யலாம்

பெருவெள்ளம் மண்சரிவினால் வீடுகள் இடிந்து பலர் மரணம்

நாட்டின் பல இடங்களில் தொடர்ச்சியாகப் பெய்த மழையினால் வெள்ளப் பெருக்கும், மண் சரிவுகளும் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கேகாலை, இரத்தினபுரி, டெடிகம, அவிசாவளை ஆகிய பகுதிகளில் இதனால் பொருட்சேதங்களும், உயிர்ச் சேதங்களும் ஏற்பட்டுள்ளன: இவற்றின் விபரங்கள் கண்டுபிடிக்கப்படவில்லை.

சில இடங்களில் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி பாடசாலைகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். நிவாரண வேலைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. இப்பகுதிகளுக்கான போக்குவரத்துச் சேவைகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை இலங்கையின் மேல் உள்ள தாழமுக்கம் குறைந்து வருவதால் தென்மேற்குப் பகுதியில் மழை பெய்யும் என கொழும்பு வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

சந்தைக்கு வந்த கசிப்பு

(புத்தூர்)

புத்தூர் உப அலுவலக எல்லைக்குள்ளிருக்கும் பொதுச் சந்தையில் வழமையாக விற்பனைக்கு வரும் பொருட்களுடன் அண்மைக் காலமாக கசிப்பும் விற்பனை செய்யப்படுவதை அவ்வூர் பொது மக்கள் கண்டுபிடித்து கசிப்பு விற்பனையாளருக்குக் கடும் எச்சரிக்கை கொடுத்துள்ளனர்.

ராணுவ கெடுபிடி..

—1-ஆம் பக்கத் தொடர்

இலங்கையில் வரழ முடியாதென்ற முடிவுடனேயே தமிழர்கள் பிரிட்டனுக்கு வருவதாகவும் திரு. அமிர்தலிங்கம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொலையுண்டவர்,,

– 1ஆம் பக்கத் தொடர்

இதேபோல வீடுகள் தீக்கிரையாக்கப்பட்ட, வசதியற்றவர்களுக்கு புதிய வீடுகளை அமைத்துக் கொடுக்கவும் கழகம் ஆலோசித்துள்ளது.

யாழ், கொழும்பு....

குப் பிரயாணிகளுடன் புறப்பட்டது.

யாழ்ப்பாணத்திலிருந்து ஞாயிறு, திங்கட்கிழமைகளில் வழக்கமான பஸ் சேவைகள் ஆரம்பமாகலாமென தெரிய வந்துள்ளது.

மீனவ மக்கள் பட்டினியால் வாடுகின்றனர்!

(யாழ்ப்பாணம்)

"வடபகுதி மீனவர்கள் கடல் கண்காணிப்பு வலய நடவடிக்கையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அதற்கும் மேலாக நெருக்கடியாக

யாழ்நகரில் நேற்று....

— 1-ம் பக்கத் தொடர்

வரப்பட்டு, கடுமையான பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்து நேற்று விற்பனை செய்யப்பட்ட பெற்றோலில் எவ்வாறு தண்ணீர் புகுந்தது என்பது பெரும் மர்மமாக இருப்பதாக சம்பந்தப்பட்ட உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதுபற்றி விசாரணை நடைபெறவிருக்கும் அதே வேளையில் பெற்றோல் நிலைய டாங்கில் இன்று விற்பனைக்கிருக்கும்மிகுதிப் பெற்றோலை இன்றுகாலை பரிசோதனைசெய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. நேற்று விற்கப்பட்ட பெற்றோலில் அறுபது வீதம் தண்ணீர் கலந்திருந்ததாகவும், அதனை வெளியேற்றி வாகன இயந்திரத்தை துப்பரவு செய்ய தமக்கு இருநூறு ரூபா வரை செலவானதாகவும் பாதிக்கப்பட்ட டாக்டர் ஒருவர் தெரிவித்தார்.

தண்ணீர் கலந்த பெற்றோலினால் நேற்று பாதிக்கப்பட்டவர்களை வாகன இலக்கம், பெயர் விலாசம் ஆகிய விபரங்களுடன் யாழ்ப்பாணம் பெற்றோலிய கூட்டுத்தாபனம் அல்லது கச்சேரியிலுள்ள உள்நாட்டு வர்த்தக உதவி ஆணையாளர் அலுவலகத்தில் உடனடியாக பதிவு செய்யுமாறு அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜனாதிபதிக்கு அவசர தந்தி

இப்போது அவர்களின் இயந்திரப்படகுகளுக்கான டீசல் தடுப்பாடு அவர்களை எதிர்நோக்குகிறது. மீனவக் குடும்பங்கள் பட்டினியால் இன்னலுறுகின்றன. இக்குறைபாட்டை நீக்கும் நடவடிக்கையை உடன் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்."

இவ்வாறு ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு யாழ். மாநகராட்சியின் மாஜி உதவி மேயர் திரு. எம். அலோஷியஸ் தந்திமூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஹெலிகப்டருக்கு...

...3ஆம் பக்கத் தொடர்

விக்கின்றன. எழுபது பேர் மரணமானதாக முன்னர்வந்த செய்திகள் தெரிவித்தன.

இங்குள்ள மூதூர், தோப்பூர், சம்பூர், கிளிவெட்டி, கட்டைபறிச்சான், கூனித்தீவு ஆகிய இடங்களிலிருந்து சுமார் ஆறுயிரம் மக்கள் அகதிகளாக வெளியேறியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

திருமலையிலிருந்து சகல வெளியிடங்களுக்குமான தொலைபேசி தொடர்பு தொடர்ந்து துண்டிக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை....

—1ஆம் பக்கத் தொடர்

கப்பட்டு, பொருட்கள் சோதனையிடப்பட்டன.

கடைகள் பூட்டுக்கள் உடைக்கப்பட்டு பார்க்கப்பட்டன.

சோதனையின் போது பயந்து ஓடிய மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. குறிப்பிட்ட சோதனை முடியுமவரை ஊர்காவற்றுறைப் பகுதி துப்பாக்கி வேட்டுச் சத்தம் பிரகடனப் படுத்தப்பட்ட இடம் போல காட்சியளித்தது.

இங்குள்ள மக்கள் வங்கிக் கிளையில் வேலைசெய்பவர்கள்வந்தவர்களால் அழைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டதுடன் வங்கி முன்னால் இருத்தி வைக்கப்பட்டனர்.

கடை ஊழியர், முதலாளிமார் உட்பட எட்டுப் பேர் வந்தவர்களால் அழைத்துச் செல்லப்பட்டுள்ள அதேவேளை இச்சோதனை நடந்து கொண்டிருந்த போது எழுவைதீவில் இருந்து ஊர்காவற்றுறைப் பகுதிக்கு படகில் இருந்து இறங்கி வரும் சமயம் சுமார் ஐந்து பேர் வரையில் பிடித்துக் கொண்டு செல்லப்பட்டனர்.

34 பேர் விபரம்....

...1 ஆம் பக்கத் தொடர்

செலவாக 2500 ரூபாவை குடும்ப உறவினருக்கு வழங்க அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

பூஸாவிலிருந்து விடுதலையான அறுபது இளைஞரின் விபரம்

பூஸாவிலிருந்து நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டு நேற்று யாழ்ப்பாணம் கொண்டு வரப்பட்ட அறுபது இளைஞர்களின் பெயர் விபரம் வருமாறு:-

எஸ். பாஸ்கரன், எஸ். ராஜேந்திரன், என். கஜேந்திரன், ஜீ. மதியழகன், ஏ. நித்தியானந்தன், எஸ். ரீ. சர்வானந்தன், கே. செல்வரட்ணம், கே. சரவணநாதன், கே. ஸ்ரீஸ்கந்தராஜா, கே சபாநாயகம், எஸ். ஸ்ரனிஸ்லோஸ், கே. சிவானந்தன், எஸ். சச்சிதானந்தன், வீ. பி. விஜயரட்ணம், எம். வேலாயுதபிள்ளை, ச. சிவகப்பிரமணியம், எஸ் அப்பாத்துரை. ஏ. அந்தோனி ஸ்பேற்மன், எஸ். டபிள்யூ. சந்திரகுமார், கே. குணரட்ணம், எம். கஜேந்திரலிங்கம், கே. இந்திரகுமார், எஸ். ஜெகதீஸ்வரன், பீ. ஜெகதீஸ்வரன், வீ கிருஷ்ணானந்தம், எஸ் குகநேசநாதன், பீ. கணேசலிங்கம், ஏ. குமாரவேலு, பீ. குலேந்திரன், வீ. முருகன், வீ. மகேஸ்வரன், ஆர். நித்தியானந்தன், எம். நித்தியானந்தன், ஆர். இரத்தினகுமார், பீ. இரத்தினகுமார், ஏ. கணேசலிங்கம், ஏ. ராமராவ், ஆர். ரகுநாதன், ரீ. இரசகுமார், பீ. இரத்தினலிங்கம்

ஆர். சிவசிறிமூர்த்தி, எஸ். சண்முகராஜா, எஸ் சற்குணநாதன், பீ சிவசுப்பிரமணியம், பி. சர்வேஸ்வரம், எம். சந்திரபரன், எஸ். சிறீஹரன், எஸ். சண்முகலிங்கம், பீ. சத்தியசீலன், எஸ். சுதாகரன், எம். செல்லத்துரை, எஸ் ஸ்ரீமோகன், ஆர். தங்கவடிவேல, ஏ. தர்மபாலன், எஸ். உதயராஜா, எஸ். உதயகுமார், வீ விமலேஸ்வரன், ஏ. விக்னேஸ்வரம், கே. யோகராஜா, ஆர். தவராஜா.

ராஜீவ் எச்சரிக்கை...

– 1ஆம் பக்கத் தொடர்

யில் அவர் மேற்கண்டவாறு சொன்னார்.

ராஜீவ் காந்தி நேற்று மாலை அங்கிருந்துபிரான்ஸ் பயணமானார்.

பிரான்சில் ஐந்து நாட்கள் தங்கியிருக்கும் பிரதமர் ராஜீவ் காந்தி பிரான்ஸ், ஜனாதிபதி மித்திரோன், மற்றும் பிரதமர் வெளிநாட்டு அமைச்சர் ஆகியோருடனும் பேச்சுவார்த்தைகள் நடாத்துவார். பிரான்ஸின் முக்கிய இடங்களையும் அவர் பார்வையிடுவார்

இன்று பாரிசில் நடைபெறும் பாரத கலாச்சார விழாவில் பிரதம அதிதியாக கலந்துகொள்வார்.

மின்சார சபை நடவடிக்கை

நாட்டில் சட்டவிரோதமாக மின்சாரம் பெறுபவர்களை கண்டுபிடிக்க இலங்கை மின்சார சபை நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கு பொலிசாரின் உதவியும் பெறப்படும்.

நேற்று கொழும்பில் நடாத்திய திடீர் சோதனையில் ஐந்து பேர் இவ்வாறு மின்சாரம் பெற்றது கண்டு பிடிக்கப்பட்டது. இவர்களுக்கு நீதிமன்ற மூலம் ஐயாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

பிரிட்டிஷ் அரச....

– 1ஆம் பக்கத் தொடர்

அழைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டு பிரிட்டிஷ் அரசு கொழும்பில் உள்ள பிரித்தானிய தூதரகத்துடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும் பி. பி. ஸி. நேற்றிரவு அறிவித்தது.

இலங்கையின் அண்மைய சம்பவங்களால் பிரிட்டன் சென்றவர்களில் இவரும் ஒருவர்.

தரமான

தங்க - வைர நகைகளை

எண்ணம் போல்

தெரிவுசெய்ய

யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்

நியூ ஆனந்தா ஜுவல்லர்ஸ்

(வின்ஸர் தியேட்டருக்கு முன்)

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

I. C. M. A.

I.C.M.A. Section 'A'

(NOVEMBER 85)

பாடநெறிகள் ஆரம்பமாகின்றன

I.C.M.A. —Section 'A' (Week-days) 10-06-85

Section 'B' (Week-ends) 08 06-85

Professional Part I (Week-ends) 08-06-85

விரிவுரையாளர் குழு

V. கருணாநிதி, K. P; அரவிந்தன், ஜோய் டேவிட்

S. R. உதயணன், Mrs. S. மூர்த்தி

விபரங்களுக்கு:

RAPID RESULTS INSTITUTE

212, Kachcheri-Nallur Road JAFFNA.

"GOOD WINE NEEDS NO BUSH"

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப்பகுதியில் 7-6-1985 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336.